# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 75/ந/2026. நாள் 10.07.2026

P.மூர்த்தி,
சோமனூர், திருப்பூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1) நகராட்சி ஆணையர்,
பல்லடம் நகராட்சி, திருப்பூர் மாவட்டம் – எதிர்மனுதாரர்கள்
2) அ.சுந்தரராஜ்,
அன்னை சில்க்ஸ் மற்றும் அன்னை ஸ்டோர்ஸ்,
பல்லடம், திருப்பூர் மாவட்டம்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம், சோமனூர், இச்சிப்பட்டி அஞ்சல், தேவராயன்பாளையம், எண்.1/88 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.P.மூர்த்தி என்பவரின் 20.02.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.02.2026 அன்று பெறப்பட்டு 75/ந/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருப்பூர் மாவட்டம், பல்லடம், சோமனூர், இச்சிப்பட்டி அஞ்சல், தேவராயன்பாளையம், எண்.1/88 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.P.மூர்த்தி என்பவரின் 20.02.2026 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“திருப்பூர் மாவட்டம், பல்லடம் நகராட்சி பகுதியின் வர்த்தக கேந்திரமாக திகழும் NGR சாலையின் மையப்பகுதியில் அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் என்ற பெயரில் பல்லாயிரம் சதுர அடி பரப்பளவில் செயல்படும் நான்கு தளங்கள் கொண்ட வணிக கட்டுமானத்தில் வாகன நிறுத்துமிட (Vehicle Parking) ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி 20.03.2024–ல் உயர்திரு பல்லடம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு புகார் மனு அளித்திருந்தேன்.

அதன்பேரில் வணிக வளாகத்திலுள்ள ஆக்கிரமிப்பை அகற்றிட 11.09.2024 மற்றும் 01.10.2024 ஆகிய தேதிகளில் முறையே படிவம்–1, படிவம்–2களின்படி உயர்திரு பல்லடம் நகராட்சி ஆணையாளர் அவர்களால் மேற்கண்ட அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் வணிக வளாக உரிமையாளர்களுக்கு அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட மேற்கண்ட வணிக வளாக உரிமையாளர்கள் புகார்தாரராகிய என்னை அணுகி ஆசை வார்த்தைகள் கூறி புகார் மனுவை திரும்பப்பெற வற்புறுத்தினார்கள். புகார்தாரராகிய

நான் அவர்களது ஆசை வார்த்தைகளுக்கு மசிய மறுக்கவே, பணம் கேட்டு மிரட்டுவதாக 05.11.2024 அன்று பல்லடம் காவல் நிலையத்தில் என் மீது புகார் அளித்தார்கள். அச்சு மற்றும் காட்சி ஊடகங்களிலும் அவதூறு பரப்பினார்கள். மேற்கண்ட புகாரை விசாரித்த பல்லடம் காவல்துறை, புகாரில் உண்மை தன்மை மற்றும் முகாந்திரம் இல்லாததால் வழக்கு பதிவு செய்ய மறுத்து விட்டது.

அதன் பிறகு மேற்கண்ட அனுமதியற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறல் (அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ்) வணிகக்கட்டுமானத்தின் மீது பல்லடம் நகராட்சி நிர்வாகம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாத காரணத்தால் மேற்கண்ட அனுமதியற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறல் (அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ்) வணிக கட்டுமானத்தின் மீது HUD (UD 4(1) Department, G.O.(MS)No.195, Dt.05/11/2022–ல்) வகுத்துரைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி உயர்திரு முதன்மைச் செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, சென்னை, உயர்திரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் உயர்திரு.நகராட்சிகள் மண்டல இயக்குநர், திருப்பூர் ஆகிய அரசின் உயரிய அமைப்புகளுக்கு 07.02.2025ல் புகார் மனு அனுப்பியிருந்தேன்.

இப்புகார் மனுவின் தொடர் நடவடிக்கையாக நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்கள் வழியாக, மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், திருப்பூர் அவர்களால் ந.க.எண்.1165/2025/சுஉத.நாள் 21.07.2025 அன்று அனுமதியயற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறல் (அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ்) வணிகக்கட்டுமானத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பல்லடம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அரசின் மேலமைப்புகளின் மேற்கண்ட அறிவுறுத்தல்களை பல்லடம் நகராட்சி ஆணையாளர் அவர்கள் பொருட்படுத்தாமல், நடவடிக்கை மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்தி வருவது குறித்து நகராட்சி ஆணையாளரிடம் நேரில் சென்று வினவியபோது படிவம்–1, படிவம்–2, படிவம்–3ல் நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு எதிராக மேற்கண்ட அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் வணிகக்கட்டுமானத்தின் உரிமையாளர்கள் அரசுக்கு மேல் முறையீடு செய்திருப்பதால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலாது என்று நகராட்சி ஆணையாளர் அவர்கள் விளம்பினார்கள்.

இதன் உண்மைத்தன்மை அறிந்து கொள்ள, தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005–ன் பிரிவு 6(1)ன் கீழ், 19.05.2025ல் அரசுக்கு விண்ணப்பம் செய்த நேர்வில், பல்லடம் நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு (படிவம்–1, படிவம்–2, படிவம்–3) எதிராக எந்தவொரு மேல்முறையீட்டு விண்ணப்பமும் பெறப்படவில்லையென்று கடித எண்.10626615/ந.வ.4(நி.ப.மா.2) 2025–1 நாள் 21.07.2025, அரசு சார்பு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, சென்னை மற்றும் கடித எண்.10626615/ந.வ.4(நி.ப.மா.2) 2025–2 நாள் 29.07.2025 , அரசு இணைச்செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, சென்னை ஆகிய அரசின் உயர் மேல்முறையீட்டு அமைப்புகளிடமிருந்து தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

மேற்கண்ட அரசின் உயர் அமைப்புகளின் கடிதங்கள் வாயிலாக தெரியவருவது யாதெனில், பல்லடம் நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு (படிவம்–1, படிவம்–2, படிவம்–3) எதிராக மேற்கண்ட அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் வணிகக்கட்டுமானத்தின் உரிமையாளர்கள் அரசுக்கு மேல்முறையீடு ஏதும் செய்யவில்லை என்பது ஊர்ஜிதம் ஆகிறது.

பல்லடம் நகராட்சி ஆணையாளர் அவர்கள் மேற்கண்ட அனுமதியற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறல் (அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ்) வணிகக்கட்டுமானத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளாமல் மெத்தன போக்குடன் செயல்படுவதும் காலம் தாழ்த்தி வருவதும் இதன் மூலம் ஊர்ஜிதம் ஆகிறது.

ஆகவே மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் இம்முறையீட்டு மனுவை பரிசீலனை செய்து, உரிய விசாரணை மேற்கொண்டு பல்லடம் நகரம் NGR சாலையில் அமைந்துள்ள மேற்கண்ட அனுமதியற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறல் (அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ்) வணிகக்கட்டுமானத்தின் மீது மாண்பமை உச்சநீதிமன்றம், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் ஆகியவற்றின் உத்தரவுகளின்படியும் மற்றும் HUD(UD4(1)Department, G.O.(MS) No.195, Dated. 05.11.2022–ல் வகுத்துரைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும் நடவடிக்கை மேற்கொள்ள பல்லடம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு தகுந்த ஆணை வழங்குமாறும், 20.03.2024–ல் புகார் அளித்து 2 ஆண்டுகள் கடந்தும் மேற்கண்ட புகார் மனு மீது நாளது தேதி வரை முழுமையான நடவடிக்கை மேற்கொள்ளாமல், அரசு பணியை சரிவர செய்யாமல் அரசுக்கும் உள்ளாட்சி அமைப்பிற்கும் பல லட்சம் ரூபாய் வருவாய் இழப்பை ஏற்படுத்தி வரும் பல்லடம் நகராட்சி ஆணையாளர் அவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆணை வழங்குமாறும் வேண்டி, இம்முறையீட்டு மனுவை தங்களிடம் பணிந்து தாக்கல் செய்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பல்லடம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. பல்லடம் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.822/2026/எப்1, நாள் 21.04.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

"பல்லடம் நகராட்சி பகுதியில் N.G.R.சாலையில் அமைந்துள்ள அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் என்ற பல்லடுக்கு வணிக வளாக கட்டிடம் அனுமதி பெறாமல் செயல்பாட்டில் உள்ளதாக திரு.மூர்த்தி அவர்களால் இந்நகராட்சியில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக கட்டிடமானது பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11. கதவு எண்.8,9,10,10A, 23 A1 N.G.R.சாலையில் அமைந்துள்ளது.

வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேற்படி கட்டிடத்திற்கு பல்லடம் நகராட்சியின் மூலம் நகர் ஊரமைப்பு சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் எண்.35/1972) பிரிவு 56, 57ன் படி கட்டிட அனுமதி விபரம் மற்றும் இட உரிம ஆவணங்கள், F.M.B. வரைபடம், வில்லங்கசான்று மற்றும் வருவாய் ஆவணங்கள் வழங்க கோரி கட்டிட உரிமையாளருக்கு படிவம்–1ன்படி (ஆவணங்கள் கேட்கும் அறிவிப்பு) 11.09.2024ம் தேதியன்று அனுப்பப்பட்டுள்ளது.

அவ்வறிவிப்பினை கட்டிடதாரர் திரு.சுந்தரராஜ் என்பவர் பெற்றுக்கொண்டு மேற்படி கட்டிடம் 20 ஆண்டுகளுக்கு முன்னர் அவருடைய தந்தை திரு.அந்தோணிபிச்சை அவர்களால் கட்டப்பட்டுள்ளதாகவும் சொத்தானது அவருடைய தந்தை பெயரில் இருப்பதாகவும் அவருக்கு எட்டு மகன்கள் இருப்பதாகவும், மேற்படி கோரிய தகவல்களை அவர்களின் வீட்டில் தேடிப்பார்த்து மற்றும் வருவாய்த்துறையில் பெற்று சமர்ப்பிக்க ஒரு மாத கால அவகாசம் கேட்டு 19.09.2024 அன்று தெரிவித்துள்ளார்.

கட்டிடதாரர்களுக்கு ஆவணங்கள் சமர்ப்பிக்க போதிய அவகாசம் வழங்கப்பட்டும் உரிய காலத்திற்குள் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால், மேற்படி கட்டிடத்தை ஆய்வு செய்து அளவைப்பணி மேற்கொள்ளும் பொருட்டு 23.10.2024 அன்று படிவம்–IIற்கான அறிவிப்பு வழங்கப்பட்டு 25.10.2024 அன்று கட்டிட உரிமையாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட விவரப்படி அளவீடுகள் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>கட்டிட விவரம்.</u>

| | | | |
|---|---|---|---|
| தரைகீழ் தளம் | – | 165’ 9” x 44’ 0” | = 7293 ச.அடி |
| தரைத்தளம் | – | 165’ 9” x 44’ 0” | = 7293 ச.அடி |
| முதல்தளம் | – | 165’ 9” x 44’ 0” | = 7293 ச.அடி |
| இரண்டாம் தளம் | – | 165’ 9” x 44’ 0” | = 7293 ச.அடி |
| மூன்றாம் தளம் | – | 165’ 9” x 44’ 0” | = 7293 ச.அடி |

மொத்தப்பரப்பு – 36,465 ச.அடி என்ற அளவில் உள்ளதாக அளவீடு செய்யப்பட்டுள்ளது. படிவம்–I மற்றும் படிவம்–II அறிவிப்புகள் வழங்கப்பட்டும் மற்றும் நேரில் பலமுறை அறிவுறுத்தப்பட்டும் அனுமதி விபரம் கோரியும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில் மேற்படி தெரிவித்துள்ள கட்டிடத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி அரசாணை (MS) எண்.195 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி { UD4 (1) } துறை நாள் 05.11.2022ன்படியும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் எண்.35/1972) உப விதி (1) பிரிவு 56ன்படியும் படிவம்–III { See rule 5 (a) } ன்படி மூடி முத்திரையிடும் அறிவிப்பு கட்டிட உரிமையாளர்களான (1)திரு.ஆரோக்கிய பட்டுராஜா, (2) திரு.அருள்ராஜ், (3) திரு.கிறிஸ்டோபர், (4) திரு.அற்புதராஜ், (5) திரு.சுந்தரராஜ் அவர்களுக்கு 6.11.2024 அன்று இந்நகராட்சியின் மூலம் நேரில் சார்பு செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்படி கட்டிடத்தை மூடி முத்திரையிடும் பொருட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்ட அறிவிப்பு படிவம் V தயார் செய்து கட்டிட உரிமையாளருக்கு சார்பு செய்யப்படாத நிலையில் மேற்படி நபர்களால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971 பிரிவு 80–Aன் கீழ் துணைச்செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களுக்கு மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் நகல் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971 பிரிவு 80–Aன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவின் மீது நாளது தேதி வரை விசாரணை மேற்கொள்ளப்படாமல் நிலுவையில் உள்ளதால் தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள இயலவில்லை. மேற்படி மேல்முறையீடு 80–Aன் மனுவின் மீது மேற்கொள்ளப்படும் விசாரணையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.” எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர், எதிர்மனுதாரரான பல்லடம் நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளர்கள், அன்னை சில்க்ஸ் மற்றும் அன்னை ஸ்டோர்ஸ் ஆகியோரை 02.06.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.P.மூர்த்தி என்பவர் 02.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில் –

“திருப்பூர் மாவட்டம், பல்லடம் நகராட்சி பகுதியில் கேந்திரமாக விளங்கும் NGR சாலை மையப்பகுதியில் அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் என்ற வணிக வளாகம் நான்கு தளங்களை கொண்ட கட்டுமானம் வாகனம் நிறுத்துமிடத்தை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால், அதனை அகற்ற கோரி பல்லடம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு புகார் அளிக்கப்பட்டதன் பேரில் படிவம்–1 மற்றும் படிவம்–2 மூலம் வணிக வளாக கட்டிட உரிமையாளர்களுக்கு நகராட்சியால் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது. எனினும் அனுமதிமயற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறலுடன் உள்ள அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் வணிக வளாக கட்டுமானத்தின் மீது நகராட்சி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் உள்ளது.

நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1165/2025/2எகா நாள் 21.07.2025ன் மூலம் அனுமதியற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறலுடன் உள்ள அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் வணிக வளாக கட்டுமானத்தின் மீது நடவடிக்கை எடுத்திட பல்லடம் நகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அறிவுறுத்தல்களை நகராட்சி ஆணையர் கடைபிடிக்காமல் உள்ளார். இதுகுறித்து கேட்டபோது மேற்படி கட்டுமானத்திற்கு படிவம்–1, படிவம்–2 மற்றும் படிவம்–3 மூலம் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் கட்டுமானத்தின் உரிமையாளர்கள் அரசுக்கு மேல் முறையீடு செய்திருப்பதாக நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டது. இதன் உண்மைத்தன்மை அறிய தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட பதிலில் மேல்முறையீட்டு விண்ணப்பம் பெறப்படவில்லை என்ற தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

பல்லடம் நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு எதிராக அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் கட்டுமானத்தின் உரிமையாளர்கள் அரசுக்கு மேல் முறையீடு செய்யவில்லை என்பது ஊர்ஜிதம் ஆவதால் மேற்படி அனுமதிமயற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள பல்லடம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தினை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 40,000 சதுர அடி பரப்பளவிலான அனுமதியற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறலில் உள்ள மேற்படி அன்னை ஸ்டோர்ஸ் கட்டுமானத்திற்கான தொழில் வரி, நூலகவரி, சொத்துவரி உள்ளிட்ட வரியினங்கள் கடந்த 20 ஆண்டுகாலமாக முறையாக செலுத்தப்படாததால், பல்லடம் நகராட்சிக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே பல லட்சம் ரூபாய் அரசுக்கு வரவேண்டிய வரி இனங்களை முறையாக வசூலிக்காமலும், மேற்கண்ட அனுமதிமயற்ற/அங்கீகாரமில்லாத/சட்டவிரோத கட்டுமானத்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல், அரசு பணியை சரிவர செய்யாமல், கடமை தவறிய குற்றமிழைத்த பல்லடம் நகராட்சி ஆணையர் அவர்கள் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவுகள் வழங்குமாறு மாண்பமை முறைமன்ற நடுவம் அவர்களை பணிந்து வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான பல்லடம் நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் 02.06.2026 அன்று விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"மனுதாரரின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள NGR சாலையில் அமைந்துள்ள அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் என்ற வணிக வளாக கட்டிடம் ஆய்வு செய்யப்பட்டு, நகர் ஊரமைப்புச்சட்டம், 1971, (தமிழ்நாடு சட்டம் எண்.35/1972) பிரிவு 56, 57ன்படி கட்டிட அனுமதி விவரம் மற்றும் இட உரிம ஆவணங்கள், FMB வரைபடம், வில்லங்கசான்று, வருவாய் ஆவணங்கள் வழங்கக்கோரி படிவம்–1ன்படி கட்டிட உரிமையாளருக்கு 19.09.2024ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பிற்கு கட்டிடம் 20 ஆண்டுகளுக்கு முன்னர் அவருடைய தந்தையால் கட்டப்பட்டுள்ளது எனவும், அக்கட்டிடம் அமைந்துள்ள சொத்து தந்தையின் பெயரில் உள்ளதால் நகராட்சியால் கோரிய தகவல்களை வழங்கிட ஒரு மாதகாலம் அவகாசம் வழங்குமாறு கட்டிடதாரர் திரு.சுந்தரராஜ் என்பவரால் கேட்டுக்கொள்ளப்பட்டது. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் உரிய காலத்திற்குள் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததைத் தொடர்ந்து மேற்படி கட்டிடத்தினை கட்டிட உரிமையாளர்கள் முன்னிலையில் அளவீடு செய்து படிவம்–2ன் வழி 23.10.2024 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது.

படிவம்–1 மற்றும் படிவம்–2ன்வழி அறிவிப்புகள் வழங்கப்பட்டும், நேரில் பலமுறை அறிவுறுத்தப்பட்டும், கட்டிட உரிமையாளர்களால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால், மேற்படி கட்டிடத்தை அனுமதியற்ற கட்டிடமாக கருதி அரசாணை எண்.195, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD4 (1) ) துறை நாள் 05.11.2022–ன்படியும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971,

(தமிழ்நாடு சட்டம் எண்.35/1972) உப விதி (1) பிரிவு 56ன்படியும் படிவம் III (see rule 5 (a) ன்படி மூடி முத்திரையிடும் அறிவிப்பு கட்டிட உரிமையாளர்களாக (1) திரு.ஆரோக்கிய பட்டுராஜா, (2) திரு அருள்ராஜ், (3) திரு.கிறிஸ்டோபர், (4) திரு.அற்புதராஜ், (5) திரு.சுந்தரராஜ் ஆகியோருக்கு 6.11.2024ல் சார்வு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி கட்டிடத்தை மூடி முத்திரையிடும் பொருட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்ட அறிவிப்பு படிவம் V தயார் செய்து கட்டிட உரிமையாளர்களுக்கு சார்பு செய்ய உள்ள நிலையில், மேற்படி கட்டிட உரிமையாளர்களால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 80–A-ன்கீழ் துணைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களிடம் 07.12.2024 அன்று மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகல் நகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின்போது மேற்படி அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் கட்டிடத்தின் உரிமையாளர் அரசுக்கு மேல் முறையீடு செய்தது குறித்து அரசிடம் எதுவும் நிலுவையில் இல்லை என்று தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் பதில் பெற்றுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளதால், மேற்கொள்ளப்பட்ட மேல்முறையீட்டு நிலுவை குறித்து 15 தினங்களுக்குள் சம்மந்தப்பட்ட அரசு துறையினரிடம் விவரங்கள் பெற்று இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்பதனை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம்.''

8. இரண்டாம் எதிர்மனுதாரரான அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் வணிக வளாக கட்டிடத்தின் உரிமையாளர்களில் ஒருவரான திரு.சுந்தரராஜ் என்பவர் 02.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

“NGR சாலையில் அமைந்துள்ள எங்களது அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் என்ற வணிக வளாக கட்டிடம் 26 ஆண்டுகளுக்கு முன்னர் எங்களது தந்தையால் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் எங்கள் தந்தையால் கட்டப்பட்டு சகோதரர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டு தனியாக வரிவிதிப்பு செய்து தனியாக சிறு கடைகளாக நடத்தி வருகிறோம். இந்த அனைத்து கடைகளுக்கும் முறையான அனுமதி பெற்றுள்ளோம். பல்லடம் நகராட்சியால் கோரிய தகவல்களை வழங்கிட கால அவகாசம் கோரினோம். நகராட்சியால் படிவம் –1, படிவம்–2 வழங்கப்பட்டது. மேலும் படிவம்–3ன் மூலம் கட்டிட உரிமையாளர்களான (1)திரு.ஆரோக்கியபட்டுராஜா, (2)திரு.அருள்ராஜ், (3)திரு.கிறிஸ்டோபர், (4)திரு.அற்புதராஜ், (5) திரு.சுந்தரராஜ் ஆகிய எங்களுக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து நாங்கள் தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் வீட்டுவசதித்துறை செயலர் அவர்களுக்கு 80–A ல் மேல்முறையீடு செய்துள்ளோம் என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி முறையீடு அரசின் பரிசீலனையில் உள்ளதால், அரசின் உத்தரவை எதிர்நோக்கி எங்களது கட்டிடத்தினை வரன்முறை செய்து கொள்கிறோம் என்பதை பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.''

9. பல்லடம் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.822/2026/எப்1, நாள் 05.06.2026ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்களின் அறிவிப்பு முறையீட்டு மனு எண்.75/ந/2026 நாள் 05.05.2026ல் கண்டுள்ள மனுவில் தெரிவித்துள்ளபடி திரு.P.மூர்த்தி, சோமனூர் அவர்களின் 20.02.2026 நாளிட்ட முறையீட்டு மனு சம்மந்தமான விசாரணை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற கூட்டத்தில் 02.06.2026ம் தேதி அன்று நடைபெற்றதில், விசாரணையில் முறையீட்டு மனுதாரர்

திரு.P.மூர்த்தி அவர்கள் அன்னை சில்க்ஸ் மற்றும் அன்னை ஸ்டோர்ஸ் கட்டிட உரிமையாளர்கள் பல்லடம் நகராட்சி ஆணையாளர் அவர்களால் நகர் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 56, 57ன்படி வழங்கப்பட்ட படிவம் I,II,IIIக்கு எதிராக திரு.சுந்தரராஜ் அவர்கள் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையில் 80–Aன் கீழ் மேல் முறையீட்டு மனு சமர்ப்பிக்கவில்லை எனவும் அந்த துறையிடம் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் மனு கோரி தகவல் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணையில் மதிப்புக்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் பல்லடம் நகராட்சி ஆணையாளரிடம் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வளர்ச்சித்துறையை அணுகி அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் உரிமையாளர்கள் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971 பிரிவு 80Aன்கீழ் துணைச்செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தலைமைச்செயலகம், சென்னை–9ல் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்த மேல்முறையீட்டு மனுவின் உண்மைத்தன்மையை அறிந்து அறிக்கையாக சமர்ப்பிக்க தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் சென்னை தலைமைச்செயலகத்தில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அலுவலகத்தில் 02.06.2026ம் தேதியன்று மாலை 4.00 மணியளவில் நேரடியாக சென்று UD4/(L.Re) பிரிவில் அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் கட்டிட உரிமையாளர்கள் பல்லடம் நகராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு, எதிராக தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 80Aன் கீழ் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளனரா என்ற விபரம் கோரப்பட்டது.

மேற்படி பிரிவு அலுவலர் அவர்கள் திரு.ஆரோக்கிய பட்டுராஜா மற்றும் திரு.சுந்தரராஜன் உள்ளிட்ட 4 நபர்களால் பல்லடம் நகராட்சி ஆணையாளர், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971ன்படி அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு எதிராக தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 80–Aன் கீழ் மேல் முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி மனு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்தார் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது".

10. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பல்லடம் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், வாக்குமூலம், நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம், இரண்டாம் எதிர்மனுதாரரான அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் வணிக வளாக கட்டிடத்தின் உரிமையாளர்களில் ஒருவரான திரு.சுந்தரராஜ் என்பவரின் வாக்குமூலம், மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

திருப்பூர் மாவட்டம், பல்லடம் நகராட்சி பகுதியின் வர்த்தக கேந்திரமாக திகழும் NGR சாலையின் மையப்பகுதியில் அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் என்ற பெயரில் பல்லாயிரம் சதுர அடி பரப்பளவில் செயல்பட்டு வரும் நான்கு தளங்கள் கொண்ட வணிக கட்டுமானத்தில் வாகன நிறுத்துமிட ஆக்கிரமிப்பை அகற்ற கோரி 20.03.2024ல் பல்லடம் நகராட்சி ஆணையரிடம் மனுதாரர் புகார் அளித்துள்ளதும், அனுமதியற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறல் அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் வணிக கட்டுமானத்தின் மீது பல்லடம் நகராட்சி நிர்வாகம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாததால், மேற்படி வணிகக்கட்டுமானத்தின் மீது HUD (UD4(1) Department, G.O. (MS) No.195, நாள் 05.11.2022ல் வகுத்துரைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்படி நடவடிக்கை மேற்கொள்ள முதன்மைச்செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்சித்துறை, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சிகள் மண்டல இயக்குனர், திருப்பூர் ஆகியோருக்கு 07.02.2025ல் புகார் மனு மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ளதும், மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், திருப்பூர் அவர்களின் ந.க.எண்.1165/2025/சஉத, நாள் 21.07.2025 அன்று அனுமதிமயற்ற/அங்கீகாரமில்லாத/விதிமீறல் அன்னை ஸ்டோர்ஸ் மற்றும்

அன்னை சில்க்ஸ் வணிகக்கட்டுமானத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பல்லடம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படாததால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள வணிக கட்டிடமானது பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11, கதவு எண்.8,9,10, 10A, 23 A1 N.G.R. சாலையில் அமைந்துள்ளது என்பதும், மேற்படி கட்டிடத்திற்கு பல்லடம் நகராட்சியின் மூலம் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (தமிழ்நாடு சட்டம் 35/1972) பிரிவு 56,57ன்படி கட்டிட அனுமதி விபரம் மற்றும் இட உரிம ஆவணங்கள், F.M.B. வரைபடம், வில்லங்கச்சான்று மற்றும் வருவாய் ஆவணங்கள் வழங்க கோரி கட்டிட உரிமையாளருக்கு படிவம்–Iன்படி (ஆவணங்கள் கேட்கும் அறிவிப்பு) 11.09.2024 அன்று அனுப்பப்பட்டுள்ளதும், போதிய அவகாசம் வழங்கப்பட்டும் உரிய காலத்திற்குள் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் கட்டிடத்தை ஆய்வு செய்து அளவைப்பணி மேற்கொள்ளும் பொருட்டு 23.10.2024 அன்று படிவம்–IIற்கான அறிவிப்பு வழங்கப்பட்டு, 25.10.2024 அன்று கட்டிட உரிமையாளர்கள் முன்னிலையில் அளவீடுகள் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதும், கட்டிடத்தின் மொத்தப்பரப்பு 36,465 சதுர அடி என்ற அளவில் உள்ளதாக அளவீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், படிவம்–I மற்றும் படிவம்–II அறிவிப்புகள் வழங்கப்பட்டும், நேரில் அறிவுறுத்தப்பட்டும், அனுமதி விபரம் கோரியும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில் கட்டிடத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி அரசாணை (MS) எண்.195, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ( UD4 (1) ) துறை, நாள் 05.11.2022ன்படியும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35/1972) உட்பிரிவு (1) பிரிவு 56ன்படியும் படிவம்–III (See rule 5(a) )ன்படி மூடி முத்திரையிடும் அறிவிப்பு கட்டிட உரிமையாளர்களுக்கு நகராட்சியின் மூலம் நேரில் சார்பு செய்யப்பட்டுள்ளதும், கட்டிடத்தை மூடி முத்திரையிடும் பொருட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்ட அறிவிப்பு படிவம்–V தயார் செய்து கட்டிட உரிமையாளருக்கு சார்பு செய்யப்படாத நிலையில் மேற்படி கட்டிட உரிமையாளர்களால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80–Aன் கீழ் துணைச்செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களுக்கு மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் பல்லடம் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

NGR சாலையில் அமைந்துள்ள அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் வணிக வளாக கட்டிடம் 26 ஆண்டுகளுக்கு முன்னர் தங்களது தந்தையால் கட்டப்பட்டு சகோதரர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டு, தனியாக வரிவிதிப்பு செய்து தனியாக சிறு கடைகளாக நடத்தி வருவதும், அனைத்து கடைகளுக்கும் முறையாக அனுமதி பெற்றுள்ளதும், பல்லடம் நகராட்சியால் படிவம்–1, படிவம்–2 வழங்கப்பட்டுள்ளதும், படிவம்–3ன் மூலம் கட்டிட உரிமையாளர்களான திருவாளர்கள். ஆரோக்கிய பட்டுராஜா, அருள்ராஜ், கிறிஸ்டோபர், அற்புதராஜ் மற்றும் சுந்தரராஜ் ஆகியோருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளதும், அதனைத்தொடர்ந்து கட்டிட உரிமையாளர்கள் தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் வீட்டு வசதித்துறை செயலர் அவர்களுக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80–Aல் மேல் முறையீடு செய்துள்ளதும், மேற்படி மேல்முறையீடு அரசின் பரிசீலனையில் உள்ளதால் அரசின் உத்தரவை எதிர்நோக்கி தங்களது கட்டிடத்தினை வரன்முறை செய்து கொள்ளப்படும் என்பதும் 2–ம் எதிர்மனுதாரரான அன்னை ஸ்டோர்ஸ் மற்றும் அன்னை சில்க்ஸ் கட்டிட உரிமையாளர்களில் ஒருவரான திரு.சுந்தரராஜ் என்பவரது வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

"9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of individuals. xxx xxx xxx.".

எனவே, புகாருக்குள்ளான கட்டிடத்தினை வரன்முறை செய்ய மனுதாரர் மற்றும் 4 நபர்கள் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80–அன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்து அம்மனு அரசின் பரிசீலனையில் உள்ளதாக எதிர்மனுதாரர் அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில், இது குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை என்றும், அரசிடமிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பல்லடம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜூலை 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.P.மூர்த்தி,
   த/பெ. திரு.பழனிசாமி,
   1/88, தேவராயன்பாளையம்,
   இச்சிப்பட்டி (அஞ்சல்),
   சோமனூர் (வழி),
   பல்லடம் தாலுகா,
   திருப்பூர் மாவட்டம் – 641 668.
2. நகராட்சி ஆணையர்,
   பல்லடம் நகராட்சி,
   பல்லடம், திருப்பூர் மாவட்டம்.
3. திரு.அ.சுந்தரராஜ்,
   த/பெ. அந்தோணி பிச்சை,
   அன்னை சில்க்ஸ் மற்றும் அன்னை ஸ்டோர்ஸ்,
   கதவு எண். 23, N.G.R. சாலை,
   பல்லடம் , திருப்பூர் மாவட்டம்.
   கைபேசி எண். 94430 25058.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.

5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.